[28th March 1959

Rameswaram Board High School.

* 1031 *Q.*—Sri N. MARUDACHALAM (on behalf of Sri N. K. PALANISAMI): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there was a strike in the Board High School, Rameswaram, during November 1958;

(*b*) if so, on what grounds; and

(*c*) whether the students of the Board High School protested the use of Congress Flag during the procession of students on Children's Day on 14th November 1958?

The Hon. Sri C. SUBRAMANIAM: (*a*) Yes, Sir. There was a partial strike during November 1958.

(*b*) & (*c*) A statement[a] is placed on the table of the House.

Sri N. MARUDACHALAM: ஸார், மாணவர்களை அரசியலில் பங்கு கொள்ளக் கூடாது என்று கூறிவிட்டு, அவர்களை ஒரு கட்சிக் கொடியை பிடிக்கச் சொல்லி நிர்ப்பந்தித்தது நியாயம் தானா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: இந்த ஸ்டேட்மெண்ட்டைப் படித்திருந்தால் இந்த மாதிரிக் கேள்வியைப் போட்டிருக்க மாட்டார் என்று நினைக்கிறேன். மாணவர்களைக் கொடி பிடிக்க வேண்டுமென்று யாரும் சொல்லவில்லை. ஒரு காங்கிரஸ்காரர் காங்கிரஸ் கொடி பிடித்துப் போனார். அந்த ஊர்வலத்திலே காங்கிரஸ் கொடி வரக்கூடாது என்று தடுத்து விட்டார்கள்.

Village Officers.

* 1032 *Q.*—Sri M. K. SOMASUNDARAM (on behalf of Sri V. SANKARAN): Will the Hon. the Minister for Revenue be pleased to tate whether there is any proposal to increae the emoluments of village officers from 1959 as was done in the case of Non-Gazetted Officers?

The Hon. Sri M. A. MANICKAVELU: No, Sir.

Sri S. M. ANNAMALAI: ஸார், இந்த கிராம உத்தியோகஸ்தர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களைப் போல முழு நேர உத்தியோகஸ்தர்களாகக் கருதப்படாமல் இருந்த போதிலும் 24 மணி நேரமும் வேலை செய்யக்கூடிய நிலையில் இருப்பதால், அவர்களை நான்-கெஜடெட் ஆபீசர்களாக அங்கீகரிக்க சர்க்கார் முன் வருவார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU: அவர்கள் முழு நேர ஊழியர்கள் இல்லை என்பது உண்மை. அதை அனுசரித்து வெகு நாட்களாக அந்த முறையிலே சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. அதையெல்லாம் பரிசீலனை செய்து முழு நேர ஊழியர்களாக நியமிக்கலாமா என்பதெல்லாம் பரிசீலனையில் இருக்கிறது.

Sri P. G. MANICKAM: ஸார், சர்க்காரால் மேற் கண்ட பரிசீலனை அநேக காலமாக நடத்தப்பட்டு வருகிறது. அது எப்போது முடிவிற்கு வரும் ? அது எப்போது அமுலுக்குக் கொண்டு வரப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU: அநேகமாக சீக்கிரமாகவே ஒரு முடிவிற்கு வந்து அதைச் சில இடங்களில் அமுலுக்குக் கொண்டு வரலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது.

---

[a] Printed as Appendix II on pages 814–815 infra.

28th March 1959]

SRI N. R. THIAGARAJAN : பல்வேறு பரம்பரைகள் நாட்டிலே அழிந்து வரும்போது, கிராம முன்சீப்புகள், கர்ணம் இவர்களுடைய பரம்பரை இருந்து வருகிறது. இதை ஸ்பெஷலாக கவனித்து இந்தப் பரம்பரையையும் அழிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இவர்கள் அடிப்படை உத்தியோகஸ்தர்களாக இருப்பதால் இந்த பரம்பரை நீடித்து இருக்கிறது. அதையும் பரிசிலனை செய்து முடிவு எடுக்கப்படும்.

MR. SPEAKER : Let us take up question Nos. 1033, 1034 and 1035 at the end.

Uniform pension rules for all categories of teachers.

* 1036 *Q.*—SRI K. VINAYAKAM (on behalf of SRI V. SANKARAN) : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to adopt uniform pension rules for all categories of teachers?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

Concession granted to the N.G.O's.

* 1037 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of) SRI P. S. SANTHANAM) : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

என்.ஜி.ஒ.க்கள் (கெஜட் பதிவற்றவர்கள்) தங்கள் பதவியிலிருந்து ஓய்வு பெற்றவுடன், அவர்களுக்கு வேலையிலிருக்கும்போது கொடுத்து வந்த மருத்துவ சலுகையும், பிள்ளைகளுக்கு கல்வி சலுகையும் அளிக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : "No, Sir."

Training in craft in schools

*1041 *Q*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் எத்தனை பள்ளிகளில் கைத்தொழில் கல்வி அபிவிருத்தி வசதிகள் அளிக்க உத்தேசம் ?

(ஆ) என்னென்ன கைத்தொழில்களில் இவ்வசதிகள் அளிக்கப்படும் ?

(இ) எந்தெந்த பள்ளிகளில் இத்திட்டம் அமுலுக்கு வரும் ?

(ஈ) இதற்காக சர்க்கார் அளிக்கும் உதவி என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) *to* (*d*) A statement[a] is placed on the table of the House.

SRI A. VEDARATHNAM : தொழில் பயிற்சி அளிக்கப்படுகிற பள்ளிகளுக்கு எல்லாம் முதலிடம் கொடுத்து அந்தத் தொழில் கல்வி பள்ளிகளில் அவைகளுடன் இதர கல்வி முறையை புகுத்துவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தொழில் கல்வியில் மட்டும் முன்னேற்றம் வேண்டும் என்பது அல்ல. ஆசிரியர்களை அங்கே அமைக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகையினால் ஆதாரப் பள்ளிகளுக்கு தனிபட்ட ஒரு திட்டமாக எடுத்து அந்த் திட்ட அடிப்படையில் ஆதாரக் கல்வியை விரிவாக்கப்படுகிறது.

---

[a] Printed as Appendix III on pages 815-817 infra.